# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.41/2022

DW2–செந்தில்குமார் நாள்.03.12.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு எழுத, படிக்க தெரியும். எந்த வழக்கு சம்மந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் ரூ.5லட்சம் வாங்கியது சம்மந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன். சரவணனின் அம்மாவிடம் ரூ.5லட்சம் வசந்தா வாங்கியுள்ளார். 24.11.2015ல் வாங்கியுள்ளார். அந்த அடமான பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளதால் எனக்கு அந்த விவரம் தெரியும். நானும், என்னுடன் கலையரசனும் சாட்சி கையெழுத்து போட்டோம். நான் 2வது சாட்சியாக கையெழுத்து செய்தேன். அடமானபத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். சாட்சி கையெழுத்து போடும்போது பத்திரத்தை படித்துபார்த்து தான் போட்டேன். பத்திரத்தில் ரூ.6லட்சம் என்று எழுதப்பட்டுள்ளது. ஏன் ரூ.6லட்சம் போட்டுள்ளீர்கள் என்று வசந்தா கணவரிடம் கேட்டேன். எப்போதும் எழுதுவது போன்று பணத்தை மிகைபடுத்தி எழுதுவதாக சரவணனின் அம்மா சொன்னார். இதுசம்மந்தமாக வசந்தாவின் கணவரிடம் நான் சொன்னேன். அவர் எதுவும் சொல்லவில்லை. அவர்கள் பணம் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் முன்னிலையில் பணம் கொடுக்கவில்லை. வட்டியை என்னிடம் சொல்லி தான் வசந்தா கொடுத்தார். 2015ல் பத்திரம் பதிந்த பின்னர் 3 மாதங்களுக்கு மாதம் ரூ.10,000/– வீதம் கொடுத்துள்ளார். அதன்பின்னர் 2017ம் வருடம் ரூ.1,80,000/– கொடுத்துள்ளார். பணம் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. ஒவ்வொரு முறை பணம் கொடுக்க போகும்போது வசந்தாவின் கணவர் சொல்லிவிட்டு சொல்வார். ரூ.5லட்சத்திற்கு வட்டி ரூ.2,30,000/– சேர்த்து செலுத்தியபின்னர் பத்திரம் பதிந்து கொடுக்க வேண்டுமென்று வசந்தா கணவரிடம் சரவணன் கேட்டார். பின்பு பாப்பாத்தியின் வீட்டிற்கு வசந்தாவின் கணவர் ஊரில் உள்ள 4 ஆட்களை அழைத்து கொண்டு சென்றார், நான் போகவில்லை. பணம் கொடுத்தற்கு ரத்து செய்ய கேட்டு

போனார். பத்திரத்தை ரத்து செய்வது சம்மந்தமாக நான் சார்பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை. வீட்டுகடன் பத்திரத்தை ரத்து செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி மீது பிரதிவாதி காவல்துறை உயர்அதிகாரிகள் மற்றும் முதல் அமைச்சருக்கு புகார் அனுப்பினார். புகாரில் என்ன விவரம் கூறியுள்ளார் என்று எனக்கு தெரியாது. அவர் சொல்லி தான் புகார் அனுப்பிய விவரம் எனக்கு தெரியும். திருச்சி சமயபுரம் ஈச்சம்பட்டியில் வசந்தாவின் கணவர் பிளாட்டை விற்று பத்திரத்தை ரத்து செய்ய ரூ.3,60,000/– கொண்டுசென்றார். இந்த விவரம் அவர் சொல்லி தான் எனக்கு தெரியும். நான் 10.04.2022ம் தேதி சார்பதிவாளர் அலுவலகம் சென்றதாகவும், வாதி மேற்கொண்டு பணம் கேட்டதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வசந்தா என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.